# பட்டயம்

மலர் - 05 ஆகஸ்டு - 2009 இதழ் - 10

Date of Issue : 01-08-2009

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 5

Issue : 10 Price Per Copy : Rs.5.00




உங்களை விடுவிக்கிற... தேவனாகிய கர்த்தர் நான்.
யாத்.6:7

"I AM THE LORD YOUR GOD, WHICH BRINGETH YOU OUT FROM UNDER THE BURDENS OF THE EGYPTIANS" - EXODUS 6/7

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

## கேள்வி - பதில்

### 83. ஜாமக்காரர்களின் வேலை என்ன?

இரவும் பகலும் ஜெபிக்கிற தேவபிள்ளைகள் தான் ஜாமக்காரர்கள். நாம் செய்ய வேண்டிய வேலை ஜெப வேலை. அவரவர் ஜெப வேலையை அவரவர் செய்ய வேண்டும். நெகேமியாவின் நாட்களில் எருசலேம் அலங்கம் இடிக்கப்பட்டிருந்த நிலையில் அதை எடுத்து கட்டுகிற வேலை ஆரம்பமானதை கேள்விப்பட்ட சன்பல்லாத், தொபியா எரிச்சலடைந்து வேலையைத் தடை செய்ய முயன்றார்கள். அப்போது யுத்த வீரர்கள் பட்டயம், ஈட்டி இவைகளைப் பிடித்து அலங்கத்தைக் காவல் செய்தார்கள். இடது கையில் ஆயுதம் தரித்து வலது கையால் வேலை செய்தார்கள். ஜெபமும் வேண்டும். வேலையும் செய்யப்பட வேண்டும். நாம் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு போகக் கூடாது. நாம் பிடிக்க வேண்டியது வேத வசனமாகிய ஆவியின் பட்டயமாகும். ஜெபம் இல்லாத இடத்தில் கர்த்தருக்கடுத்த காரியங்கள் நடப்பிக்க முடியாது.

எக்காளம் ஊத வேண்டும்; தேவனை அதிகமாகத் துதிக்க வேண்டும். அப்போது கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணுவார். பாலகர் வாயினால் துதி முளைக்கப் பண்ணுவார். துதியினால் சாத்தானும், சத்துருக்களும் அடங்குவார்கள். எருசலேமுக்குள் இராத்தங்கி வேலையை செய்தார்கள். இது இரவெல்லாம் விழித்திருந்து ஜெபிப்பதைக் குறிக்கும். பகலிலே ஜெபித்து விடலாம். இரவிலே ஜெபிக்க ஆளில்லை. இராக்காலத்தில் 1 மணி நேரமாவது எழும்பி ஜெபிக்க வேண்டும். இதற்கென்று ஜாமக்காரர்கள் கட்டளையிடப்பட வேண்டும். ஜெபிக்கிற ஜாமக்காரர்கள் தங்கள் இரட்சிப்பின் வஸ்திரத்தை இழந்து போகாதவர்களாக இருக்க வேண்டும். 24 மணி நேரம் ஜெபித்தாலும் இரட்சிப்பின் வஸ்திரம் இல்லாவிட்டால் அந்த ஜெபம் கேட்கப்படாது. அவரவர்க்கு ஆயுதமும் தண்ணீரும் இருந்தது. ஆயுதம் என்பது சர்வாயுதவர்க்கத்தைக் குறிக்கும். தண்ணீர் என்பது பரிசுத்தாவியைக் குறிக்கும். எபேசியர் 6/10-18ல் சொல்லப்பட்டுள்ள சர்வாயுதவர்க்கத்தைத் தரித்து, பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஜெபிப்பவர்கள் தான் ஜாமக்காரர்கள்.

### 84. தேவபணியை நிறுத்தாமல் தொடர்ந்து செய்ய எப்படி முடியும்?

கர்த்தருடைய பணிக்கு விரோதமாக கர்த்தருடைய சத்ருக்கள் எழும்பத் தான் செய்வார்கள். தேவனுடைய பிள்ளைகளுக்கு இடம்

கொடுக்கக் கூடாதபடிக்கு தடை செய்வார்கள். தேவ பிள்ளைகள் எந்தக் காரியத்திலும் முன்னேற விடாதபடி செயல்படுவார்கள். இதை மீறி நாம் தேவனுக்காக எதையாகிலும் செய்தால் அவர்களுக்கு மிகுந்த கோபமும், எரிச்சலும் வரும். அதை எப்படி கெடுக்கலாம்; நிறுத்தலாம்; தடை செய்யலாம் என போராடுவார்கள்; ஊழிய வேலையை ஓயப்பண்ண முயற்சி எடுப்பார்கள். உடனே நாம் அதை நிறுத்தி விடக்கூடாது. தொடர்ந்து தேவ பணியை செய்ய

1. இரவும் பகலும் ஜெபிக்கிற ஜாமக்காரர்கள் எழும்ப வேண்டும்.
2. தேவசத்துருக்களின் துர்க்கிரியைகளை, கொலைவெறிகளைக் கட்டி ஜெபிக்க வேண்டும்.
3. குடும்பம் குடும்பமாக ஒருமித்து கர்த்தரின் காரியமாக எழும்ப வேண்டும்.
4. ஜெபத்தை எந்த சூழ்நிலையிலும் நிறுத்தக் கூடாது.
5. அதிகமாகத் துதிக்க வேண்டும்.
6. சர்வாயுதவர்க்கத்தைத் தரிக்க வேண்டும்.
7. இரட்சிப்பின் வஸ்திரத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்.
8. கண்ணீரோடு அழுது ஜெபியுங்கள்.
9. பரிசுத்த ஆவியின் நிறைவோடு ஜெபியுங்கள்.
10. உபவாசித்து ஜெபியுங்கள்.

## 85. தானதர்ம ப□ன்றால் என்ன?

'தானம்' என்றால் பிறர் கேட்காமலே கொடுப்பது. 'தர்மம்' என்பது பிறர் கேட்கும் போது கொடுப்பதாகும். கஷ்டப்பட்டவர்கள் கேட்காமல் இருக்கும் போது நாமாக முன்வந்து அவர்களுக்கு உதவி செய்வது தான் தான ப;□இயலாதவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் உங்கள் பங்குகளைக் கொடுப்பதுதான் தர்மப□உங்கள் நண்பருக்கு நீங்கள் உங்கள் அன்பினிமித்தம் அன்பளிப்பாக கொடுப்பது தர்மமும் அல்ல, தானமும் அல்ல. தர்மம் செய்யும் போது 2 காரியங்களைப் பார்க்க வேண்டும். 1. அவன் இல்லாதவனாக இருக்க வேண்டும். (அல்லது) 2. இயலாதவனாக இருக்க வேண்டும். 'நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட ப□ரின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (எபிரேயர் 13/16 ).

## 86. ஆவிக்கேற்ற பலியென்றால் என்ன?

( I பேதுரு 2/5 )

கருத்தோடு ஆராதிப்பது நம் மூளை அறிவினால் ஆராதிப்பதாகும். இந்தக் கருத்து என்பது நம் மூளைக்கும், இதயத்திற்கும் தெரியும். கருத்தை உணர்ந்து புரிந்து துதிக்கிறோம். இதை மட்டும் செலுத்தினால் போதாது. ஆவியினாலும் ஆராதனை செய்ய, பரிசுத்த ஆவியைப் பெற வேண்டும். நம் ஆவியோடு பரிசுத்த ஆவியானவர் இணையும் போது நாம் ஆவியினால் ஜெபிக்க முடிகிறது. ஆகவே மனிதன் ஆவிக்கேற்ற விதமாய் ஆராதிக்க முடிகிறது. இது நம் மூளை அறிவுக்கு ஏற்றபடி இருக்காது. இது தேவனுடைய ஆவிக்கு ஏற்றபடி இருக்கும். இது தான் அந்நிய பாஷையில் ஆராதிப்பதாகும். அந்நிய பாஷை மூலம் தேவனுடைய மகத்துவங்களைப் பேச முடியும். (அப் 2/11).

அந்நிய பாஷை என்பது மனுஷ பாஷையாக இருக்கலாம் அல்லது தூதர் பாஷையாக இருக்கலாம்; பூமியில் 6,500 பாஷைகள் உண்டு. பரலோகில் எத்தனை பாஷைகள் உண்டு என்பது நமக்குத் தெரியாது. அபிஷேகம் பெறும் போது நாம் மனுஷர் பாஷையும் பேசலாம் அல்லது தூதர் பாஷையும் பேசலாம். ஆனால் அந்த பாஷை தெளிவாக இருக்க வேண்டும். நவமான பாஷைகளைப் பேசி பலி செலுத்த வேண்டும். (மாற்கு16/17). ஜனங்கள் ஒருமனப்பட்டு ஆராதனை செய்யும்படி அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப் பண்ணுவேன் என செப் 3/9 கூறுகிறது. அந்நிய பாஷைகளால் தேவனை ஆராதியுங்கள். இது தான் ஆவியினால் ஆராதிப்பதாகும் (பிலி 3/3). ஆவியின் அபிஷேகம் பெற்று ஒருமனப்பட்டு சபையில் வந்து ஆராதிப்பது தான் ஆவிக்கேற்ற பலி செலுத்துவதாகும். அபிஷேகத்தைப் பெறாவிட்டால் நாம் ஆவிக்கேற்ற பலி செலுத்த முடியாது. ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தும்படி நாம் ஆசாரியக் கூட்டமாக இருக்கிறோம்.

பழைய ஏற்பாட்டின்படி பிரதான ஆசாரியன் மட்டுமே பலி செலுத்துவான். புதிய ஏற்பாட்டிலே அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவரும் ஒரு ஜீவனுள்ள கல்லாக இருந்து ஆவிக்கேற்ற பலி செலுத்த முடியும்.

## 87. ஏன் தேவ பிள்ளைகளுக்கு அதிக பாடுகள் வருகிறது?

உலகத்திலே பாடுகள், துன்பங்கள், உபத்திரவங்கள் உண்டு. விசுவாசிகள் ஆண்டவரைச் சார்ந்து அந்தப் பாடுகளில் ஜெயம் எடுக்க

வேண்டும், பாடுகளிருந்து விடுதலை பெற சத்தியத்தை அறிந்து கீழ்படியுங்கள்.

உலக மக்களுக்கு அதிக பாடுகள் இல்லை. நமக்குள்ள அளவுக்கு உலக மக்களுக்கு பாடு இல்லை. ஏனென்றால் சாத்தான் அவர்களுக்கு விரோதி இல்லை. ஆண்டவர் பிள்ளைகளுக்கு சாத்தான் விரோதி. உலக மக்களுக்கு சத்துருக்கள் இருப்பதைக் காட்டிலும் ஆண்டவர் பிள்ளைகளுக்கு அதிக சத்துருக்கள் உண்டு. முதல் சத்துரு நமக்கு சாத்தான். ஆகவே சாத்தான் அவன் பிள்ளைகளை காரணமில்லாமல் நமக்கு விரோதமாக எழும்பப் பண்ணுவான். ஆண்டவருக்கு அவன் சத்துருவாய் இருக்கிறபடியால் அவர் பிள்ளைகளுக்கும் அவன் சத்துரு தான். ஆகவே தான் காரணமில்லாமலும், முகாந்தரமில்லாமலும் சாத்தான் தன் ஜனங்களை கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக எழுப்புவான். ஆகவே நமக்கு அதிக பாடுகள் உண்டு. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகள் எல்லாவற்றினின்றும் அவனை விடுவிப்பபார். பிசாசைச் சேவிக்கிற மக்களுக்கு அவன் நேரடி எதிராளி அல்ல.

உண்மையாய் நாம் கர்த்தருடைய பிள்ளைகளாக இருப்போமானால் நமக்கு உபத்திரவங்கள், துன்பங்கள் உண்டு. வானமண்டலத்துப் பொல்லாத ஆவிகளோடும், அந்த காரலோகாதிபதிகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. மாம்சத்தோடும், இரத்தத்தோடும்,பணபலமுள்ளவர்களோடும்,பதவி பலமுள்ளவர்களோடும் நமக்கு போராட்டம் உண்டு.

### 88. பாடுகள் மத்தியில் கர்த்தருடைய பிள்ளைகள் எப்படிக் காணப்பட வேண்டும்?

பாடுகள் வரும் போது ஆண்டவர் எனக்கு இந்த பாடுகளையெல்லாம் அனுமதித்து விட்டார் என சொல்லக் கூடாது. ஆண்டவரை மறுதக்கக் கூடாது. தேவனைத் தூஷிக்கக் கூடாது. வாழ்க்கையை வெறுத்து விடவும் கூடாது. பாடுகளில் வெட்கப்படவும் கூடாது. பாவத்தினிமித்தம் பாடு வந்தால் பாவத்தை விட வேண்டும். மனம் திரும்ப வேண்டும். அதே சமயம் ஆண்டவர் நாமத்தினிமித்தம் பாடுகள் வந்தால் வெட்கப்படக் கூடாது. சந்தோஷபட வேண்டும். ஆண்டவரை விட்டு விலகிப் போகக் கூடாது.

எவ்வளவுக்கவ்வளவு பாடுகள் வருகிறதோ அவ்வளவுக்கவ் வளவு ஆண்டவர் மேல் வைராக்கியமாய் இருங்கள். அழைத்த அழைப்பை விட்டுப் பின் வாங்கிப் போகக் கூடாது. முன்னோக்கி முன்னேறி செல்லுங்கள். அப்போது கர்த்தரின் பார்வையில் நீங்கள் விசேஷமானவர்கள். ஆண்டவர் ஒப்புக் கொடுக்காமல் எந்தப் பாடும் இல்லை. பாடுகள் மத்தியிலும் நன்மை செய்யுங்கள்; கனி கொடுங்கள்; பாடுகள் மத்தியிலும் துதியுங்கள்; ஸ்தோத்தரியுங்கள்; ஆண்டவருக்கு ஊழியம் செய்யுங்கள்; ஆண்டவரை பின்பற்றுங்கள்; அவர் மேல் பக்தியாய் இருங்கள்; சோர்ந்து போகக் கூடாது. ஆபத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலன் குறுகினது. எந்த சூழ்நிலையிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்.

வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் இயேசுவுக்காய் வாழுங்கள். எவ்வளவாய் பாடு சகிக்கிறீர்களோ அவ்வளவாய் பரலோகில் பலன் கிடைக்கும். ஆண்டவர் நாமத்தினிமித்தம் பட்ட கஷ்டம், நஷ்டம், உபத்திரவம், நிந்தனை எல்லாவற்றிற்கும் பலன் உண்டு. இம்மையிலும் உண்டு; மறுமையிலும் உண்டு. ஆமென்!

**89. ஏன் தேவ சித்தம் செய்ய வேண்டும்?**

பாவம் செய்யாமல் இருக்கலாம். ஜெபிக்கலாம்; ஸ்தோத்தரிக்கலாம். தேவ சித்தத்திற்கு இசைந்து உன் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்திருக்கிறாயா?. தேவ சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான். பரலோகம் போக வேண்டுமானால் பூமியில் அவர் சித்தம் செய்ய வேண்டும்; தேவ சித்தத்திற்கு இசைந்து அவரோடு ஒரே ஆவியாய் இருக்க வேண்டும். ஆண்டவர் எதை விரும்புகிறாரோ அதே சிந்தை நமக்கும் வர வேண்டும் ஜாடிக்கு ஏற்ற மூடியாக இருந்தால் நம்மை அவர் எடுத்து பயன்படுத்தவார். அவருக்கு சித்தமான சில காரியங்கள் இருக்கும். அதற்கு மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுப்பவர்களை அவர் எடுத்து பயன்படுத்துவார். நம் சுயத்திற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. அப்போது அவர் பரிபூரண சித்தம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறும். அதனால் ஆண்டவருக்கே மகிமை, புகழ்ச்சி, கீர்த்தி உண்டாகும்.

அவர் சித்தத்திற்கு இசைந்து வராதபடிக்கு சாத்தானாலும், சத்துருக்களாலும் போராட்டங்கள் வரும். அவைகளை ஜெபித்து மேற் கொள்ள வேண்டும். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் எல்லாவற்றிலுமிருந்து அவனை விடுவிப்பார். விடுதலை கிடைக்காது

என எண்ணி கர்த்தரின் வல்லமையை அற்பமாய் எண்ணக் கூடாது. பெரிய தீமையாக இருந்தாலும் தீமைகளை மாற்றுவார். சில பாடுகள் வெளியரங்கமாகத் தெரியும். சில பாடுகள் வெளியரங்கமாகத் தெரியாது. ஆண்டவர் எல்லா பாடுகளையும் மாற்றுவார் என முழு விசுவாசத்தோடு அவர் சித்தம் நிறைவேற்ற வேண்டும்.

### 90. கர்த்தருடைய புயம் நமக்கு எப்போது வெளிப்படும்?

எழுதப்பட்ட திருவசனங்களை அப்படியே விசுவாசித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். மோசேயின் கரத்தை உயர்த்தும்படி தேவன் சொன்னார். கரத்தை உயர்த்திய போது செங்கடல் பிளந்தது. ஒரு சிறு பிள்ளையைப் போல ஆண்டவர் வார்த்தைகளை நம்பி அதற்கு கீழ்படிய வேண்டும். யார் கீழ்படிகிறார்களோ அவர்களை நாளுக்கு நாள் தேவன் உயர்த்துவார். பழைய ஏற்பாட்டு பக்தர்களின் வெற்றியின் அடையாளம் அவர்கள் கர்த்தருக்கு அப்படியே கீழ்படிந்தார்கள். ஆபிரகாம் தன் மகனை ப[illegible]யிட தேவன் சொன்ன போது அதற்கு அப்படியே கீழ்படிந்தான்.

தாவீதுக்கு விரோதமாக கோ[illegible]யாத் எழும்பினான். இஸ்ரவேலுடைய சேனைகளை கோ[illegible]யாத் நிந்தித்தான். இஸ்ரவே[illegible] தேவன் மேல் தாவீது வைராக்கியாய் இருந்தான். ஒரு சிறு பிள்ளையைப் போல நாமும் கர்த்தரையும் அவர் வார்த்தைகளையும் அப்படியே விசுவாசிக்க வேண்டும். தாவீது ஆற்றிலுள்ள 5 கூழாங்கற்களை பொறுக்கிக் கொண்டு தன் கவணையும் எடுத்துக் கொண்டு பெ[illegible]ஸ்தியனிடம் சென்றான். பட்டயத்தை அவன் எடுத்துக் கொண்டு போகவில்லை. கூழாங்கல்லை அவன் நம்பவில்லை. ஆண்டவரை முழு நிச்சயமாக நம்பினான். ஆண்டவரை நம்பி செயல்படுங்கள். அவர் நிச்சயம் உங்களுக்கு வெற்றியைத் தருவார். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. அவரை நம்புகிற பிள்ளைகளுக்கு அவர் கரம் உதவியாக இருக்கும்.

யார் தாவீதைப் போல, ஆபிரகாமைப் போல, மோசேயைப் போல விசுவாசித்து கீழ்படிகிறார்களோ அவர்களுக்கு கர்த்தருடைய புயம் வெளிப்படும். கோ[illegible]யாத்துக்கு சரீரபெலன், ஆயுதபெலன், ஆட்கள் பெலன், பிசாசுகளின் பெலன் இருந்தது. ஆகவே தான் அவன் தன் தேவர்களைக் கொண்டு தாவீதைச் சபித்தான். தாவீது தேவனின் பெலத்தில் நின்றான். அவனிடம் சரீர பெலமோ, ஆள்பெலமோ, பட்டய பெலமோ, பிசாசு பெலமோ இல்லை. அவன் தேவ பெலத்தில் நின்றபடியால் வெற்றி பெற்றான்.

தேவபெலத்தினால் விசுவாசித்து சாத்தான் மேலும், சத்துருக்கள் மேலும் ஜெயம் எடுங்கள். மனுஷபெலத்தையோ, வாய் பெலத்தையோ நம்பாதிருங்கள். மாம்சத்தினால் ஜெயிக்க முடியாது. பட்டயத்தை எடுக்கவும் கூடாது. பதிலுக்கு பதில் யுத்தம் செய்யாதே. விசுவாசத்தை அறிக்கை பண்ணு. தாவீது ஜெயிப்பதற்கு முன்னமே இவ்விதம் அறிக்கை செய்தான். " இன்றையத்தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார்" என்று. கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல. அவர் தம் வலது புயத்தால், ஓங்கிய புயத்தால், பலத்த கரத்தால் இரட்சிப்பார். கர்த்தரின் புயம் தாவீதுக்கு வெளிப்பட்டது. வெளிப் பார்வைக்கு அது ஒரு கல்லாகத் தோன்றினாலும், கர்த்தரின் கரம் தான் பெலிஸ்தியனை அடித்தது.

வேதவசனங்களை விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டு ஜெபியுங்கள். அவர் கட்டளைகள் பாரமானவைகளல்ல. அவர் கற்பனைகளுக்குக் கீழ்படிபவர்களுக்கு நிச்சயம் ஆசீர்வாதங்களைத் தருவார். கர்த்தரின் கற்பனைக்குக் கீழ்படியாதவர்கள் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதம் கொஞ்சகால மட்டுமே இருக்கும். ஆண்டவரின் கற்பனைகளுக்குக் கீழ்படியும் போது அவர் ஆசீர்வாதங்கள் உங்களில் நிலைத்து நிற்கும். அவர் புயம் உங்களுக்காய் வெளிப்படுவதை பார்ப்பீர்கள். ஜெயம் கர்த்தருடையது.

## 91. யாக்கோபைப் போல ஆசீர்வதிக்கப்பட, எப்படி காணப்பட வேண்டும்?

யாக்கோபு தூதனானவரோடே போராடி மேற்கொண்டான்; அழுது அவரை நோக்கி கெஞ்சினான். பெத்தேலே அவர் அவனைக் கண்டு சந்தித்து அவ்விடத்திலே நம்மோடு பேசினார். (ஓசியா 12/4)

யாக்கோபு தூதனானவரோடே போராடி மேற்கொண்டான். யாக்கோபு இயேசுவை விசுவாசித்தான். ஆனால் ஏசா தேவனை விசுவாசிக்கவில்லை. எவன் மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருப்பார் (ரோமர் 9/18). யாக்கோபை சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என எழுதியிருக்கிறது. யார் அவரை வெறுக்கிறார்களோ அவர்களை அவரும் வெறுக்கிறார். உங்களை ஒரு நபர் வெறுத்தால் அவர் வீட்டில் சென்று பேசிக் கொண்டு இருக்க மாட்டீர்கள். உன் இருதயத்திலுள்ள பரிசுத்தத்தைப் பார்க்கிறார்; இருதயத்திலே நீ ஆண்டவர் மேல் வைக்கிற அன்பைப் பார்க்கிறார்.

ஏசாவுக்கு இருதயத்திலே விசுவாசம் இல்லாதபடியால் தான் சேஷ்ட புத்திரபாகத்தை அவன் விற்றுப் போட்டான். அதனால் அதை இழந்து போனான். ஏசா ஆண்டவரை மதிக்கவில்லை. ரெபேக்காள் தேவனால் ஏவப்பட்டு ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கு கொடுக்க விருப்பப்பட்டாள். இது ஆண்டவரின் செயல். ஈசாக்கும் யாக்கோபை ஆசீர்வதித்தான் ஏசாவை விட யாக்கோபு ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்தான். ஆகவே ஆசீர்வாதம் யாக்கோபுக்குக் கிடைத்தது. ஆசீர்வாதம் நம் கையில் இல்லை. அவர் சித்தப்படி செய்வார். நமக்கு முன் வாழ்க்கை, பழைய ஜீவியம் தெரியாது. நாம் இப்போதுள்ள சூழ்நிலையை மட்டுமே பார்ப்போம். ஆகவே காலத்துக்கு முன் நிதானிக்கவும், தீர்ப்பளிக்கவும் கூடாது.

ஏசா ஆசீர்வாதத்தைப் பெற விரும்பியும் அவன் தேவனின் முகத்தைத் தேடவில்லை. யாக்கோபு ஆண்டவர் மேல் வாஞ்சை உள்ளவன்; ஏசாவுக்கோ தேவன் மேல் வாஞ்சையில்லை. யாக்கோபு ஒரு கல்லை எடுத்து தலையின் கீழ் வைத்து படுத்து நித்திரை செய்தாலும் அவன் தேவன் மேல் நினைவாயிருந்து ஜெபித்தபடியால் தான் அவனுக்கு ஒரு சொப்பனம் காட்டப்பட்டது. தேவன் அவனைத் தேடி வந்து வாக்குத்தத்தம் கொடுத்தார். யாக்கோபு உண்மையுள்ளவன்; அவன் எத்தன் அல்ல; அவன் ஆண்டவருக்கு பிரியமுள்ளவன்; ஆண்டவரின் ஆசீர்வாதத்தில் பிரியம் உள்ளவன். ஆகவே தான் சேஷ்ட புத்திர பாகத்தை விரும்பிக் கேட்டான். ஏசாவுக்கு பயற்றம் கூழின் மேல் தான் ஆசை. அவன் தேவனின் ஆசீர்வாதத்தை பெரிதாக நினைக்கவில்லை. ஒரு நேர ஆகாரத்திற்காக ஆண்டவரை அவன் விற்றுப் போட்டான்.

சாத்தான் நம்மையும் சோதிப்பான். பணம் வேண்டுமா? இயேசு வேண்டுமா? பணத்தினிமித்தம் இயேசுவை இழக்கக் கூடாது. யாக்கோபு கையில் பணம் இல்லை. ஆனால் ஏசா கையில் அவனை தேவன் ஒப்புக்கொடுக்கவில்லை. ஆண்டவரை நீங்கள் உண்மையாய் நேசிப்பீர்களென்றால். அவர் வாக்குத்தத்தங்களைக் கொடுத்து அந்த வாக்குகளின்படி செய்ய வல்லவராயிருக்கிறார்.

**யாக்கோபுக்குக் கிடைத்த வாக்குத்தத்தங்கள்.**

1. நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.
2. உன் சந்ததி பூமியின் தூளைப் போல இருக்கும்.
3. உனக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

4. நான் உன்னோடே கூட இருப்பேன்.

5. நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காப்பேன்.

6. இந்த தேசத்திற்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்.

7. நான் உன்னைக் கைவிடுவதில்லை.

இவைகளை நாமும் பெறலாமே!

**92. தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும் பிசாசின் ஆசீர்வாதத்திற்கும் உள்ள வித்தியாசங்கள் எவைகள்?**

தேவனின் ஆசீர்வாதம் என்பது சாதாரண காரியம் அல்ல; தேவ ஆசீர்வாதம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் உலகத்திற்கு ஒளியாக இருப்பீர்கள், பூமிக்கு உப்பாகவும், மலை மேல் இருக்கிற பட்டணமாகவும் இருப்பீர்கள். தேவ ஆசீர்வாதம் விசேஷமானது. தானியேலுக்கு 10 மடங்கு ஞானத்தைத் தந்தார். பூமியில் ஒருவருக்கும் இல்லாத ஞானத்தை சாலமோனுக்குக் கொடுத்தார். அவன் கேளாத ஐசுவரியத்தையும் கொடுத்தார். சாத்தான் பொருள், பணம், இவைகளைத் தரலாம். ஆனால் ஞானத்தை அவன் கொடுக்க முடியாது. ஆண்டவர் திருப்தி, சந்தோஷம், சமாதானம், தெய்வீக சுகம், பரிசுத்தம், பரலோகம், வரங்கள் இவைகளைத் தருகிறார். ஆனால் சாத்தானால் இவைகளைக் கொடுக்க முடியாது. எண்ணி முடியாத அற்புதங்கள், அதிசயங்களை தேவன் செய்கிறார். பெரிதான அதிசயங்களை சாத்தான் செய்ய முடியாது. ஆண்டவரோ அதிசயமானவர். அவரால் மட்டுமே நமக்கு நித்திய ஜீவன் தர முடியும். ள்

**93. எதை நீஆராதித்துக் கொண்டிருக்கிறாய்.?**

எதை அதிகமாக மதிக்கிறாயோ அதை நீ ஆராதிக்கிறாய். ஆண்டவரை விட உன் உயிரையோ, மனிதனையோ பெரிதாக எண்ணாதே. அவரை விட பொன்னையும், பிள்ளைகளையும் பெரிதாக எண்ணினால் நீ ஆண்டவரை ஆராதிக்கவில்லை. பிள்ளைகளை ஆராதிக்கிறாய். இது தான் hero worship. சிலர் தங்கள் வீடுகளில் போட்டிருக்கும் மனிதனின் படங்களை காலையில் எழும்பினவுடன் தொழுவார்கள். உயிருள்ள பரிசுத்தவான்களையும், மரித்த பரிசுத்தவான்களையும் தொழக் கூடாது.

லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். புகழுக்குப் பின்னால், மனிதனுக்குப் பின்னால், சாத்தானுக்குப் பின்னால் ஒரு நாளும் போகக் கூடாது. அப்படிச் சென்றால் உனக்கு பரலோகம்

கிடைக்காது. 'இயேசுவின் பின்னால் நான் செல்வேன்; திரும்பிப் பார்க்க மாட்டேன்' என உறுதியாய் இருங்கள். உலகத்தின் பெருமை, செல்வத்தின் பற்று எல்லாம் உதறிவிட்டு அவரைப் பின் செல்லுங்கள். உடல், பொருள்,ஆவி உடைமைகள் யாவும் அவருக்கு ஒப்புக் கொடுத்துப் பின் செல்லுங்கள்.

**94. இருதயத்தின் கசப்பு மாற என்ன செய்ய வேண்டும்?**

கசப்பு, வெறுப்பு, பயம் யாவும் மாற வேண்டுமா? பச்சை பாகற்காயை சுவைத்துச் சாப்பிட்டு விட்டு வாயை கொப்பளித்தாலும் கசப்பு போகாது. அது போல இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கு மட்டுமே தெரியும். சிலருக்கு பலவித கசப்பான அனுபவங்கள் இருக்கும். அவர்கள் இருதயம் கசப்பாக மாறிவிடும். அவர்கள் இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும். அதன் மகிழ்ச்சிக்கு அந்நியன் உடந்தையாகான் என நீதி 16/10 கூறுகிறது. அவரவர் இருதயத்தின் கசப்பு அவரவருக்குத் தெரியும். மனுஷரால் அந்தக் கசப்பை மாற்ற முடியாது. இந்தக் கசப்புகள் என்னை விட்டு மாறாது என எண்ணக் கூடாது. மாராவின் கசப்பை மதுரமாக மாற்றிய தேவன் உன் கசப்பு நிறைந்த வாழ்வையும் மதுரமாக மாற்றும்படி அவரிடம் விசுவாசத்தோடு கேள். இதயத்தின் கசப்பு மாற தேவனை எப்பொழுதெல்லாம் பாட முடியுமோ அப்பொழுதெல்லாம் பாடுங்கள். தேவனைத் துதிக்காவிட்டால் சாத்தான் நம் இதயத்தில் கசப்பு, வெறுப்பு எல்லாம் கொண்டு வருவான். பிறரை மன்னியுங்கள். கர்த்தர் தம் பரிசுத்த இரத்தத்தினால் இதயத்தின் கசப்புகளையெல்லாம் மாற்றி உனக்குள் நவமான இதயம், சந்தோஷமான இதயம், மதுரமான இதயம் தந்து ஆசீர்வதிப்பார்.

# தற்பரிசோதனைக் கேள்விகள்

176. வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்ள அவைகளை விசுவாசித்து ஜெபிக்கிறாயா? ரோமர் 4/20

177. உபத்திரவங்களில் சோர்ந்து போகிறாயா? ரோமர் 5/4

178. உன் இருதயத்தில் தேவ அன்பு உண்டா? ரோமர் 5/5

179. பாவத்திலே தொடர்ந்து நிலைநிற்கிறாயா? அல்லது கிருபையை க் காத்துக் கொள்கிறாயா? ரோமர் 6/1

180. பாவத்திற்கு ஊழியம் செய்கிறாயா? அல்லது தேவனுக்கு ஊழியம் செய்கிறாயா? ரோமர் 6/6

181. உன் பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டு விட்டதா? ரோமர் 6/6

182. உன் சரீர அவயவங்களை பாவத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறாயா? அல்லது தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறாயா? ரோமர் 6/13.

183. பாவம் உன்னை மேற்கொள்கிறதா? அல்லது நீ பாவத்தை மேற்கொள்ளுகிறயா? ரோமர் 6/14.

184. நீ யாருக்கு அடிமையாயிருக்கிறாய்? தேவனுக்கா? பாவத்திற்கா? ரோமர் 6/16

185. பரிசுத்தம் உன்னில் உண்டா? அல்லது அசுத்தமும் அக்கிரமும் உன்னில் உண்டா? ரோமர் 6/19.

186. நீ விரும்புகிற நன்மையைச் செய்யாமல், வெறுக்கிற தீமையைச் செய்கிறாயா? ரோமர் 7/15.

187. நன்மை செய்ய விருப்பம் உன்னில் உண்டா? ரோமர் 7/18.

188. மாம்சத்தின்படி நடக்கிறாயா? அல்லது ஆவியின்படி நடக்கிறாயா? ரோமர் 8/1

189. பாவத்திருந்து உனக்கு விடுதலை உண்டா? ரோமர் 8/2

190. மாம்ச சிந்தை உன்னில் உண்டா? அல்லது ஆவியின் சிந்தை உன்னில் உண்டா? ரோமர் 8/6

191. பரிசுத்த ஆவியானவர் உன்னில் வாசமாயிருக்கிறாரா? ரோமர் 8/11

192. தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறாயா? ரோமர் 8/13

193. தேவ சித்தப்படி உன் ஜெபம் உள்ளதா? ரோமர் 8/27

194. உன் வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று விசுவாசிக்கிறாயா? ரோமர் 8/28.

195. கிறிஸ்துவின் அன்பை விட்டு எதுவும் பிரிக்காதபடி கவனமாக இருக்கிறாயா? ரோமர் 8/36–39

196. அவர் சித்தத்திற்கு இசைந்திருக்கிறாயா? அல்லது எதிர்த்து நிற்கிறாயா? ரோமர் 9/19

197. யூதர்களின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கிறாயா? ரோமர் 10/1

198. உன் சுய நீதியை நிலைநிறுத்தப் பிரயாசப்படுகிறாயா? அல்லது தேவநீதியைத் தரித்துக் கொள்கிறாயா? ரோமர் 10/3

199. உன் வாயினாலே விசுவாச வார்த்தைகளை அறிக்கை செய்கிறாயா? அல்லது அவிசுவாச அறிக்கை செய்கிறாயா? ரோமர் 10/9

200. எல்லாரும் சுவிசேஷத்திற்கு கீழ்படிய நீ என்ன முயற்சி எடுக்கிறாய்? ரோமர் 10/ 16

(தொடரும்)

## ஜெபங்கள்

### 1. உபத்திரவத்திலும் நிலைநிறுத்தும் கர்த்தாவே!

1. உலகத்திலே உபத்திரவம் உண்டு என்று சொன்னவரே! உபத்திரவங்களைக் கண்டு மலைத்துப் போகாமல் முடிவிலே வெற்றி உண்டு என்பதை அதன் மத்தியிலே விசுவாசிக்கப் பண்ணும் (யோ16/33)

2. உபத்திரவ வேளைகளில் நண்பர்கள் எம்மைத் தவறாகப் புரிந்தாலும் அதையும் சகிக்க பெலன் தாரும் .(யோபு 19/3)

3. கர்த்தாவே! உபத்திரவ வேளைகளில் முறுமுறுக்காது காத்தருளும் (Iகொ 10/10)

4. உபத்திரவ வேளைகளில் உம்மைக் குறை சொல்லாதவனாகக் காத்தருளும் (யோபு 1/22)

5. உபத்திரவ வேளைகளில் தூஷிக்காதவனாகக் காத்துக் கொள்ளும் (யோபு 2/9,10)

6. கர்த்தாவே! உபத்திரவத்தின் வழியாக, இன்னும் உம்மைக் கிட்டிச் சேரப் பண்ணும் (ஆதி 28/12 – 32)

7. உபத்திரவத்தின் வழியாக என்னை முழுமையான கீழ்படிதலுக்குள் கொண்டு வாரும் (எபி 5/8)

8. கர்த்தாவே! உபத்திரவங்கள் என்னைப் பூரணப்படுத்துவதாக (எபி 2/10)

9. கர்த்தாவே உபத்திரவங்களைக் கண்டு பின்வாங்காதிருப்பேனாக (எபி 10/38)

10. எதிர்க்காற்று வந்தாலும், எதிர்ப்போர் வந்தாலும், என்ன வந்தாலும் தேவசித்தம் செய்வதை நிறுத்தி விடாது என்னைக் காத்தருளும் (மத் 7/21)

## 2. மகிமையான உயிர்த்தெழுதலின் பங்காளியாக்கும்

1. கர்த்தாவே! மகிமையின் சரீரத்தைத் தருவீர் என்பதை விசுவாசித்து துன்பங்களைச் சகிப்பவனாக்கும் (Iபேதுரு 1/6)

2. கர்த்தாவே! மகிமையின் சரீரத்தை தருவீர் என்பதை விசுவாசித்து விசுவாச சோதனைகளைச் சகிப்பவனாக்கும். (Iபேதுரு 1/7).

3. உமது கிருபையினால் மகிமையின் சரீரம் தருவீர் என்பதை விசுவாசிப்பவனாக்கும் (I பேதுரு 1/10)

4. மகிமையின் சரீரத்துக்குப் பங்காளியாகத் தக்கதாக பரிசுத்தமாய் வாழ்பவனாக்கும் (Iபேதுரு 1/16)

5. மகிமையின் சரீரத்துக்குப் பங்காளியென்பதை விசுவாசித்து உலக மேன்மைகளை அற்பமாய் எண்ணுபவனாக்கும். (யாக் 4/4)

6. மனுஷரால் வரும் புகழ்ச்சியை அற்பமாக எண்ணுபவனாக்கும் (யோ 5/41 )

7. உமக்கொப்பாயிருப்போம் என்பதை விசுவாசித்து நாளுக்கு நாள் பரிசுத்தமடைய வாஞ்சிப்பவனாக்கும் (Iயோ 3/2)

## 3. போதுமானவராய் வெளிப்படும் கர்த்தாவே!

1. 38 வருட வியாதியஸ்தனுக்குப் போதுமானவராயிருந்தது போல நாள் பட்ட வியாதியிலும் போதுமானவரானயிரும் (யோ 5/5, 6 )

2. நாகமானுக்குப் போதுமானவராயிருந்தது போல சரீரம் அழுகி நாறினாலும் போதுமானவராயிரும் (II இ 5/13, 14)

3. லேகியோன் கூட்ட பிசாசு பிடித்தவனுக்குப் போதுமானவராயிருந்தது போல பிசாசின் சேனைகளின் போராட்டங்களில் போதுமான வராயிரும். (மாற்கு 5/9)

4. 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரீக்குப் போதுமானவராயிருந்தது போல மருத்துவர்கள் கைவிட்டாலும் போதுமானவராயிரும் (மத் 9/20 22)

5. பாவியாயிருந்த சமாரிய ஸ்திரீக்குப் போதுமானவராயிருந்தது போல பாவியான எனக்குப் போதுமானவராயிரும் (யோ 4/14,15)

6. மரித்த லாசருக்குப் போதுமானவராய் இருந்தது போல மரணக்கட்டில் உள்ள எனக்குப் போதுமானவராயிரும் (யோ 11/43, 44)

7. சாபமானவரே ! என் மேல் வந்த சாபங்கள் யாவையும் போக்க எனக்குப் போதுமானவராய் வாரும் , கர்த்தாவே ! (கலா 3/13)

## 4. பவு□ம் பேசினவராய் வெளிப்படும்

1. கர்த்தாவே! உமக்குப் பிரியமில்லாத வழியில் செல்லும் போது என்னைத் தடுத்து நிறுத்தியருளும் (அப் 9/1-4)
2. கர்த்தாவே! உம்மை நான் எக்காரியங்களிலெல்லாம் வேதனைப்படுத்துகிறேன் என்பதை எனக்கு வெளிப்படுத்தும் (அப் 9/5)
3. முள்ளில் உதைக்கின்ற முட்டாள்தனமான காரியங்களை என்னை விட்டு அகற்றும் (அப் 9/5)
4. நான் என்ன செய்ய சித்தமாயிருக்கின்றீர் என்பதை எனக்கு வெளிப்படுத்தும் (அப் 9/6)
5. புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் உம் நாமத்தை அறிவிக்க நீர் தெரிந்து கொண்ட பாத்திரமாய் எடுத்து பயன்படுத்தும் (அப் 9/15)
6. உம் நாமத்தினிமித்தம் வருகின்ற பாடுகளிலும் நிறுத்தும் (அப் 9/16)
7. என் ஆவிக்குரிய கண்களைத் திறந்தருளும் (அப் 9/17)
8. உம் ஆவியினால் எம்மை நிரப்பும் (அப் 9/17)

## 5. யாக்கோபோடே பேசினவராக வெளிப்படும் (ஆதி 32/30)

1. கர்த்தாவே! ராஜாதி ராஜாவே! ராஜாக்களாக, ஆசாரியர்களாக உமக்கென தெரிந்து கொள்ளும். ஆவிக்குரிய இஸ்ரவேலராக வைத்துக் கொள்ளும், பரிசுத்தவான்களின் ஆளுகையில் பங்காளியாக்கும். (ஆதி 32/28)
2. கர்த்தாவே! உம்மோடு ஜெபத்தில் போராடுவதால் பொல்லாத மனுஷர்கள் மேல் ஜெயம் தாரும் (ஆதி 32/28)
3. கர்த்தாவே! உம்மோடு ஜெபத்தில் போராடுவதால் உம் கிருபை, ஜீவன், ஆசீர், வல்லமை, நன்மை. பெலன், ஆவி, அக்கினி, ஞானம், சத்தியம், நீதி யாவும் பெற்றவனாக மாற்றும் (ஆதி 32/26)
4. கர்த்தாவே! யாக்கோபு உம்மை முகமுகமாகக் கண்டானே! நீர் எப்போதும் என்னை உம் முகத்தின் வெளிச்சத்திலும் பிரசன்னத்திலும் வைத்து எல்லா இருளுக்கும் என்னை விலக்கிக் காத்தருளும். (ஆதி 32/30)

# உலகமும் ஆளுகையும்

1. பத்திரிக்கையாளர்கள் சுதந்தரம் அந்தந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் காக்கப்படுவதாக.
2. விமான விபத்துக்களின் பின்னணிகள், காரணங்கள் துல்லியமாகக் கண்டு பிடிக்கப்படுவதாக. வான்வெளிக் கொள்ளையர்கள் பிடிபடுவார்களாக.
3. இனவெறி, மதவெறி, ஜாதி வெறி, போதை வெறி, பண வெறி, போஜன வெறி, விபசார வெறி போன்ற சகல வெறிகளைக் கட்டிப் போடும் கர்த்தாவே.
4. சரீன் விஷவாயு (SARIN GAS) தீவிரவாதங்கள் வாய்க்காமல் போவதாக.
5. வெளிநாட்டு தீவிரவாதிகளோடு தொடர்புள்ள இந்தியர்கள் பிடிபடுவார்களாக.
6. பாப் பாடகர்கள் மனந்திரும்பி கர்த்தரைப் பாடுவார்களாக.
7. பாகிஸ்தான் பெறுகிற உதவிகள் தீவிரவாதங்களுக்குப் பயன்படாது போவதாக.
8. ஐரோப்பிய ஒன்றியம் காக்கப்படுவதாக.
9. தாய்லாந்தின் உள்நாட்டுக் கலவரங்கள் மாறுவதாக.
10. இந்தோனேஷியாவில் பஞ்சங்கள் மாறுவதாக
11. ஜப்பான் அமைச்சர் யாசுகா இரட்சிக்கப்படுவாராக.
12. சோமாலியாவின் அல் சபாப் தீவிரவாத அமைப்பு கட்டிப் போடப்படுவதாக; கென்யாவின் தாதாப் நகரின் ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் முகாம் காக்கப்படுவதாக.
13. பன்றிக் காய்ச்சலுக்குத் தப்புவியும் கர்த்தாவே!
14. செல்போன் நிமித்தம் வருகின்ற நோய்களுக்குத் தப்புவியும் கர்த்தாவே!
15. திறமையான பைலட்டுகள் மாத்திரம் விமானம் ஓட்ட அனுமதிக்கப்படுவார்களாக.
16. இந்தியாவின் பூர்வீகம், இந்தியாவின் புகழ் யாவும் உலகமெங்கும் தெரிவதாக; இந்திய மண்ணில் கர்த்தரின் மகிமை வெளியரங்கமாவதாக. இந்திய தேசம் கர்த்தரால் உயர்வதாக.

17. வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளில் இந்தியா நல்ல முறையில் தலையிடுவதாக.

18. பாலஸ்தீனா தனி நாடு ஆவதாக; இஸ்ரவேலோடே சமாதானம் இருப்பதாக.

19. கடலுக்கடியில் ஏற்படும் நில நடுக்கங்களால் வரும் ஆபத்துக்களுக்கு சபையைத் தப்புவியும்.

20. இத்தாயா –பியா நட்புறவுகள் மேம்படுவதாக.

21. பச்சை உடும்பு 50 அடி உயரத்திருந்து விழுந்தாலும் எலும்பு முறிவோ, காயமோ படாது. அதைப் போல எங்கள் எலும்புகளை நிணமுள்ளதாக்கும்; முறிக்கப்படாது காத்திடும். எலும்புகளை யெல்லாம் காப்பாற்றும், கர்த்தாவே!

22. புளூட்டோனியத்தால் அணு ஆயுதங்கள் தயாரிக்கும் முறைகள் தீவிரவாதிகள் கைகளில் சிக்காதிருப்பதாக.

23. மியான்மர் எதிர்கட்சித் தலைவர் ஆங்சான் சூகி விடுதலை பெறுவாராக.

24. நாடு கடத்தப்பட்ட ஹோண்டுராஸ் அதிபர் மானுவேல் பாதுகாக்கப்படுவராக.

25. உலகமெங்கும் கும்மாள விடுதிகள், கேளிக்கை விடுதிகள்,விபசார மையங்கள் மூடப்படுவதாக. சாராயப் பிசாசு ஓடிப்போவதாக.

26. தரக்குறைவான ட்யூப்ளிகேட் அறிமுகங்கள் செய்யும் நிறுவனங்கள் பிடிபடுவதாக.

27. பாகிஸ்தானில் உள்ளாக செய்யப்படும் தீவிரவாதங்கள், பாகிஸ்தான் மூலமாய் செய்யப்படும் தீவிரவாதங்கள், பாகிஸ்தானில் மறைந்திருந்து பிற நாடுகளில் செய்யப்படும் தீவிரவாதம் யாவும் பிடிவடுவதாக.

28. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் வல்லமையாய் செயல்படுவதாக.

29. கடலில் நச்சுப் பொருளைக் கலக்கி மீன் பிடித்தல், டைனமைட்டை வெடிக்க செய்து மீன் பிடித்தல் போன்ற காரியங்கள் தடை செய்யப்படுவதாக.

30. கர்த்தரைப் பாடும் பாடல்கள், இசைகள், இசைக் கலைகள் வளர்வதாக, துதிகள் உலகம் முழுவதும் முளைப்பதாக.

31. வெளிநாட்டு மாணவர்கள் பாதுகாக்கப்பட ஆஸ்திரேயா உறுதியான நடவடிக்கை எடுப்பதாக.

32. ரிமோட் ஜெப்பன் வானூர்தி தீவிரவாதங்களைக் கட்டிப் போடும் கர்த்தாவே!.

33. போதைப் பொருள் கடத்தல்காரர்கள் பிடிபடுவார்களாக.

34. கிழக்கு ஐரோப்பாவில் ஏவுகணைகளை நிரப்பும் அமெரிக்கத் திட்டம் கைவிடப்படுவதாக.

35. சீனாவின் இனக்கலவரம் வளராதிருப்பதாக.

36. ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் மேற்கத்திய அரசுகள் தலையிடாதிருப்பதாக.

37. முல்லைத் தீவு, கிளி நொச்சி பாகங்கள் சீரமைப்பபடுவதாக. அரசு ஆதரவில்லாமலே வாழ்க்கை நடத்தும்படியான வழிகளை ஜனங்கள் கைக்கொள்வார்களாக.

38. வடகொரியா சீனா உறவுகள் நன்மைக்கேதுவாயிருப்பதாக.

39. ஆப்பிரிக்க சுலு பழங்குடிகள் இரட்சிக்கப்படுவார்களாக.

40. போதைச் செடி வளர்ப்புகள் தடை செய்யப்படுவதாக.

41. ஏர் பிரான்ஸ் விமான விபத்து காரணம் கண்டுபிடிக்கப்படுவதாக.

42. நேபாளத்தில் ஜனநாயகம் தழைப்பதாக.

43. ஐக்கிய நாடுகள் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் நேர்மையாய் செயல்படுதவாக.

44. ஆஸ்திரேயாவின் இனவெறித் தாக்குதல்களைக் கட்டிப் போடும் கர்த்தாவே!.

45. மரித்துப் போன மனிதர்களை, உயிரோடுள்ள மனிதர்களை, கல்லறைகளை வழிபடுவது மாறுவதாக.

46. இலங்கையில் தமிழர்களின் சுதந்திரம் காக்கப்படுவதாக.

47. ஒவ்வொரு நாடுகளிலும் நல்ல அதிபர்கள் ஆட்சிக்கு அமர்வார்களாக.

48. பிபிபைன்ஸ் நாட்டில் உள்ள கோட்டா படோ நகரில் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 5 பேர் பயானார்கள், கிறிஸ்தவ ஆலயங்களுக்கு விரோதமான சதிகள் கவிழ்வதாக.

# புதியவெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**

(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**

(இணையதள முகவரி : www.hosannahchurch.org)

3. **FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா – ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வா□பர் பகுதி –ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் –ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் –ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS (அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

## இலவச அறுவைசிகிச்சை

பிறவி சம்பந்தக் குறைபாடுகளை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் ஜெர்மன் மருத்துவர்களால் இலவசமாக சரி செய்ய கொடைக்கானல் பாசம் மருத்துவமனையோடு தொடர்பு கொள்ளவும்.

**&: (04542) 240668**

**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி** – 627 109, **தமிழ்நாடு.** & : (954637) 245273
WEB: www.hosannahchurch.org